**இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| M.C.O.P.No. | 280/2024 | எ.ம.சா. | : 2 |
| பெயர் | சௌமியா | | |
| த/பெ. | : திரு, குமாரசாமி | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : 30 | தொழில் | : |

**முதல்விசாரணை**

நான் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணியாற்றி வருகிறேன். முதல்விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தை எனது முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். TN 36 BB 4387 வாகனத்தின் பாலிசி எ.ம.சா.ஆ.1. 24-02-2025 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சல் ரசீதுடன் எ.ம.சா.ஆ.2. 2ம் எதிர்மனுதாரர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை எ.ம.சா.ஆ.3.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து பற்றி எனக்கு நேரில் தெரியாது. ஆவணங்களின்படி தான் சாட்சியம் அளிக்கிறேன். பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. மனுதாரரை பொறுத்தவரை விபத்தை

ஏற்படுத்திய வாகனத்திற்கு 3 ம் நபர் என்றால் சரிதான். TN 36 BB 4387 வாகனம் விபத்து சமயத்தில் எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் மனுதாரருக்கு எங்களது நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.